நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மே 28-ல் குன்னூரில் பழக் கண்காட்சி**

First Published : 25 May 2011 08:59:36 AM IST

குன்னூர், மே 24: குன்னூர் சிம்ஸ் பூங்காவில் வரும் 28 மற்றும் 29ம் தேதிகளில் 53வது பழக் கண்காட்சி நடைபெறவுள்ளதாக தோட்டக்கலை இணை இயக்குநர் ஹால்துரை தெரிவித்துள்ளார்.

இது குறித்து செவ்வாய்க்கிழமை செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் கூறியது:குன்னூர் சிம்ஸ் பூங்காவில் வரும் 28, 29ம் தேதிகளில் 53வது பழக்கண்காட்சி நடைபெறவுள்ளது. இதில் 53 வகையான பழ வகைகள் கண்காட்சிக்காக வைக்கப் படவுள்ளன, முதன் முறையாக கோவை, சேலம், மதுரை, தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, தர்மபுரி, வேலூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய 10 மாவட்டங்களைச் சேர்ந்த பழ வியாபாரிகள் கண்காட்சியில கலந்து கொள்ள உள்ளனர். இதில் வெற்றி பெறுபவர்களுக்கு ரூ.15 ஆயிரம் வரையிலான ரொக்க தொகை பிரித்தளிக்கப்படும் என்றார். மேலும் 6 சுழற்கோப்பைகள், 34 பரிசுக் கோப்பைகள் வழங்கப்படும். இந்த ஆண்டு புதிதாக 13 அடி உயரம், 15 அடி அகலம், 35 அடி நீளம் கொண்ட பாரம்பரியம் மிக்க குன்னூர் ரயில் நிலைய மாதிரியை சுமார் 3 டன் சாத்துக்குடி பழங்களைக் கொண்டு வடிவமைக்கப்படும்.இந்த ஆண்டு நுழைவுக் கட்டணமாக பெரியவர்களுக்கு ரூ.20, சிறியவர்களுக்கு ரூ.10, விடியோ கேமராவிற்கு ரூ.75, போட்டோ கேமராவிற்கு ரூ.30 என்று கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிகம் சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என்று எதிர்பார்ப்பு இருப்பதால் வாகன நிறுத்தத்திற்கான அனைத்து ஏற்பாடுகளும் தீவிரமாக நடைபெற்று வருதாக அவர் கூறினார். பேட்டியின் போது தோட்டக்கலை துணை இயக்குநர் மணி உடனிருந்தார்.

**நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி**

First Published : 24 May 2011 02:32:02 PM IST

ஈரோடு, மே 23: நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த பயிற்சி முகாமில் விவசாயிகள் பங்கேற்கலாம்.

ஈரோடு வீரப்பன்சத்திரத்தில் உள்ள கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் இந்தப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. நாட்டுக்கோழி வளர்ப்பில் உள்ள விஞ்ஞான தொழில் நுட்பங்கள், விற்பனை வாய்ப்புக் குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

இந்தப் பயிற்சி செவ்வாய்க்கிழமை (மே24) காலை 10.30 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும். ஈரோடு மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள விவசாயிகள் பங்கேற்கலாம்.

இந்தப் பயிற்சி குறித்த விவரங்களை அறிந்துகொள்ள கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தினை 0424-2291482 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என ஆராய்ச்சி மையத் தலைவர் ராஜ்மனோகர் தெரிவித்துள்ளார்.

**எண்டோசல்பான் விற்றால் உரிமம் ரத்து**

First Published : 24 May 2011 12:01:39 PM IST

திருநெல்வேலி, மே 23: திருநெல்வேலி மாவட்டத்தில் எண்டோசல்பான் பூச்சிக்கொல்லி மருந்து விற்பனை செய்வோரின் உரிமம் ரத்து செய்யப்படும் என மாவட்ட ஆட்சியர் மு. ஜெயராமன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.÷இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

÷பயிர்களைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த எண்டோசல்பான் என்ற பூச்சிக்கொல்லி மருந்து திரவம் மற்றும் தூள் வடிவத்தில் தயாரிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லரை விற்பனையாளர்கள் மூலம் விற்கப்பட்டு வருகிறது. இந்த பூச்சிக்கொல்லி மருந்தை விற்பனை செய்ய இடைக்காலத் தடை விதித்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து, தமிழக அரசின் வேளாண்மைத் துறை ஆணையரகம் எண்டோசல்பான் பூச்சி மருந்தை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கு இடைக்காலத் தடை விதித்துள்ளது.

÷இதன் அடிப்படையில், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களும் தங்கள் வட்டாரத்தில் உள்ள மொத்த மற்றும் சில்லறைப் பூச்சிக்கொல்லி மருந்து விற்பனையாளர்களிடம் கைவசம் இருப்பில் உள்ள எண்டோசல்பான் பூச்சிக்கொல்லி மருந்துகளை விற்பனை செய்யத் தடை விதிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. வெளி மாநிலங்களில் இருந்தும் விற்பனை செய்வதைத் தடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

÷இதேபோல உற்பத்தியாளர்கள் எண்டோசல்பான் பூச்சிக்கொல்லி மருந்துகளை உற்பத்தி செய்ய வேண்டாம். மீறி உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களின் தயாரிப்பாளர் உரிமம் ரத்து

செய்யப்படுவதுடன், உச்சநீதிமன்ற தீர்ப்பை மீறியதற்காக சட்டப்பூர்வ நடவடிக்கையும் எடுக்கப்படும்.

÷மறுஉத்தரவு வரும் வரை எண்டோசல்பான் பூச்சிக்கொல்லி மருந்துகளை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் பயன்படுத்துதல் கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

÷மேலும் லிண்டேன் என்ற பூச்சிக்கொல்லி மருந்தையும் உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல் தடைவிதிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் எண்டோசல்பான் மற்றும் லிண்டேன் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயிர்பாதுகாப்பு தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டாம் என்றார் .

## முட்டை விலை ரூ.2.23

First Published : 24 May 2011 09:29:00 AM IST

நாமக்கல், மே 23: நாமக்கல் மண்டலத்தில் முட்டையின் விலை 3 காசுகள் உயர்ந்து, ரூ.2.23 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டது.

இதற்கான முடிவு நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் விலை நிர்ணய ஆலோசனைக் கூட்டத்தில் திங்கள்கிழமை எடுக்கப்பட்டது.

கோடைக்காலம் தொடங்கியதில் இருந்தே நாமக்கல்லில் முட்டையின் விலை குறைந்து வருகிறது. வடமாநிலங்களில் முட்டையின் நுகர்வு கடும் சரிவை சந்தித்துள்ளதே இதற்கு காரணம்.

இதனால் ஹைதராபாத் மண்டலத்தில் முட்டையின் விலை குறைந்தபட்சமாக 187 காசுகளாகவும், பர்வாலா மண்டலத்தில் 194 காசுகளாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தேசிய அளவில் நாமக்கல் மண்டலத்தில்தான் அதிகபட்சமாக முட்டை ஒன்றின் விலை 223 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டது.

இதற்கிடையே, கோடையின் தீவிரத்தால் மொத்த முட்டை உற்பத்தியில் 6 முதல் 7 சதவீதம் வரை குறைந்துவிட்டது. எனவே, தேவைக்கேற்ற முட்டையை விநியோகம் செய்ய முடியாத சூழல் உருவாகியுள்ளது. எனவே, முட்டை விலை மெல்ல உயரத் தொடங்கியுள்ளது.

இதுகுறித்து கோழிப் பண்ணையாளர்கள் கூறியது:

கோடைக்காலத்தில் கோழிகளின் முட்டையிடும் திறன் வெகுவாகக் குறைந்துள்ளதே விலை உயர்வுக்கு முக்கியக் காரணம் என்றனர்.

தினமலர்

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : மே 25,2011,00:00 IST



**நவீனமுறை ஜப்பானியக் காடை வளர்ப்பு**: ஜப்பானியக் காடை வளர்ப்பு தமிழகத்தில் பிரபலமாகிவரும் முக்கிய தொழில்களில் ஒன்றாகும். காடைகள் பொதுவாக முட்டைக்காகவும் இறைச்சிக்காகவும் வளர்க்கப் படுகின்றன. இருப்பினும் காடைகள் இறைச்சிக்காகவே அதிகம் வளர்க்கப்படுகின்றது. டெல்லி, சென்னை, பெங்களூரு, திருச்சி, மதுரை மற்றும் கோவை போன்ற மாநகரங்களிலும் தமிழகத்தின் ஏனைய நகரங்களிலும் காடை வளர்ப்பு தொழிலானது பெரிய பண்ணைத் தொழிலாகவே வளர்ந்துள்ளது.

**இறைச்சிக்காடை வளர்ப்பு**: ஜப்பானியக் காடைகளை பொறுத்தவரையில் அவற்றை மிகக்குறைந்த இடத்தில் அதிக எண்ணிக்கையில் வளர்க்கலாம். கோழி வளர்ப்பினைப் போன்று அதிக அளவில் முதலீடு தேவையில்லை. இத்தொழிலில் குறைந்த மூலதனத்துடன் சிறிது பயிற்சி பெற்ற யாரேனும் ஈடுபடலாம். ஜப்பானியக் காடைகளுக்கு நோய் எதிர்ப்புத்திறன் அதிகம். இதனால் எந்த ஒரு தட்பவெப்ப நிலையிலும் நன்றாக வளரும். கோழிகளைப் போல் பல தடுப்பூசிகள் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஜப்பானியக் காடைகள் முதல் ஆறு வாரத்திற்குள் விற்பனைக்குத் தயாராகிவிடுகின்றன. இதனால் முதலீடு செய்த குறைந்த நாட்களிலேயே லாபத்தைப் பெற முடியும். ஜப்பானியக்காடை ஆறுவார காலத்தில் அதிகபட்சமாக 500 கிராம் அளவே தீவனம் உட்கொள்வதால் தீவனச்செலவு அதிகமின்றி குறைந்த முதலீட்டில் காடை வளர்ப்பை மேற்கொள்ள முடிகிறது. இறைச்சிக்காக வளர்க்கும்பொழுது, காடைகளைத் தரையிலோ (ஆழ்கூளக் குப்பை முறை) அல்லது கூண்டு முறையிலோ வளர்க்கலாம்.

**ஆழ்கூள முறை**: இறைச்சிக்காக ஜப்பானியக் காடையை ஆழ்கூள முறையில் வளர்க்கும்பொழுது ஒரு சதுர அடிக்கு 6 காடைகள் வரை வளர்க்கலாம். காடைகளை முதல் இரண்டு வாரம் வரை ஆழ்கூள முறையில் வளர்த்து பின்னர் கூண்டுகளுக்கு மாற்றி ஆறு வாரம் வரை வளர்க்கலாம். ஆழ்கூள முறையில் இரண்டு வாரத்திற்கு மேம்பட்டு காடைகளை வளர்த்தால் அவை அதிகம் அலைந்து திரிந்து, உட்கொண்ட தீனியின் எரிசக்தியை வீணாக்கி, குறைந்த எடையுடன் அதிகத்

தீனிச்செலவும் ஏற்படுத்தும். எனவே, காடைகளை ஆழ்கூள முறையில் இருவாரங்களுக்கு வளர்த்து, பிறகு கூண்டுகளுக்குள் மாற்றி வளர்ப்பதே சிறந்த பராமரிப்பு முறையாகும்.

**கூண்டுமுறை வளர்ப்பு**: இறைச்சிக்காகக் காடைகளை வளர்க்கும்பொழுது முதல் இரண்டு வாரம் வரை 3 அடி நீளம், இரண்டரை அடி அகலம் உள்ள கூண்டுகளில் கூண்டு ஒன்றுக்கு 100 காடைக்குஞ்சுகள் வரை வளர்க்கலாம். அவற்றை 3 முதல் 6 வாரம் வரை 4 அடி நீளம், இரண்டரை அடி அகலம், 18 அங்குல உயரம் உள்ள கூண்டுகளில் கூண்டு ஒன்றுக்கு 50 காடைகள் வரை வளர்க்கலாம்.

**தீவனம் அளித்தல்**: ஜப்பானியக் காடைகளுக்கும், கோழித் தீவனத்தில் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களே உபயோகப்படுத்தலாம். காடைகளுக்கு குஞ்சு பருவத்தில் அளிக்கும் தீவனம் 26 முதல் 28 சதவீதம் புரதமும், 270 கி.கலோரி எரிசக்தியும் கொண்டதாக இருக்க வேண்டும். இவ்வகைத் தீவனத்தை முதல் 6 வாரம் வரை உபயோகிக்கலாம். ஆனால் இந்த வயதிற்குள் இருவகைத் தீனிகளை மாற்றிப் பயன்படுத்த திட்டமிடும்பொழுது முதல் மூன்று வாரங்கள் வரை 24 சதவீத புரதமும், 2800 கி.கலோரி எரிசக்தியும் உள்ள தீனியை உபயோகிக்கலாம்.

**ஜப்பானியக் காடை வளர்ச்சி**: சுத்தம் செய்யப்பட்ட காடை இறைச்சியின் எடை உயிருள்ள காடையின் எடையில் சுமார் 65 முதல் 70 சதவீதம் வரை இருக்கும். சுமார் 140 கிராம் எடையுள்ள காடையை சுத்தம் செய்தால் 100 கிராம் எடையுள்ள இறைச்சி கிடைக்கும். காடை இறைச்சி மிகவும் சுவையாக இருப்பதால் நல்ல விற்பனை விலை கிடைக்கிறது. காடை இறைச்சியில் அதிக புரதமும் (20.5 சதவீதம்), குறைந்த அளவு கொழுப்பும் (5 சதவீதம்) இருப்பதால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் ஏற்ற உணவாக கருதப்படுகிறது. (தகவல்: ரா.தங்கத்துரை, பிஎச்.டி., வெ.பழனிச்சாமி, பிஎச்.டி., வீ.தவசியப்பன், எம்.வி.எஸ்சி., வேளாண் அறிவியல் நிலையம், குன்றக்குடி-630 206. 04577-264 288)

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**தென்னையில் எரிபூச்சி கட்டுப்பாடு**

பதிவு செய்த நாள் : மே 25,2011,00:00 IST



தென்னையைத் தாக்கும் முக்கிய பூச்சிகளில் ஒன்று கொன்தேலா ரோடுண்டா என்ற எரிபூச்சியாகும். இது அந்துப்பூச்சி இனத்தைச் சேர்ந்த உயிரினம் போன்ற உடலமைப்புடன் காணப்படும். இப்புழுக்களின் உடல்மீது, சிறு உரோமங்களும் அதன் நுனியில் வட்டமான சுரப்பிகளும் இருக்கும். இதிலிருந்து வெளிப்படும் திரவம் தோல் அரிப்பை ஏற்படுத்தும். இந்த வகை எரிபூச்சிகள் சில சமயங்களில் மட்டுமே தோன்றி சேதம் விளைவிக்கின்றன.
தமிழகத்தைப் பொறுத்தவரையில் தென்மாவட்டங்களில் முக்கியமாக மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளை ஒட்டியுள்ள திண்டுக்கல், தேனி, பொள்ளாச்சி போன்ற பகுதிகளில் எரிபூச்சியின் தாக்கம் கோடை காலத்தில் அதிகம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவை பொதுவாக உயரமாக வளர்ந்துள்ள தென்னை மரங்களைத் தாக்குகின்றன. தண்ணீர் பற்றாக்குறை உள்ள தென்னந்தோப்புகளில் இதன் தாக்கம் மிகுந்து காணப்படும். எரிபூச்சியின் புழுக்கள் தென்னை ஒலையின் பச்சையத்தைச் சுரண்டி சாப்பிட்டு நரம்புகளை மட்டுமே விட்டுவைக்கின்றன. புழுக்களின் கழிவுப் பொருட்கள், மரத்தூள் போல் மரங்களுக்குக் கீழே மண்ணில் கிடந்து இருக்கும். இப்பூச்சிகள் இலைகளைத் தின்பது மட்டுமல்லாமது தென்னம்பாளைகளும் குரும்பைகளும் தாக்கி சேதம் விளைவிக்க வல்லவை.
இப்பூச்சியின் தாய் அந்துப்பூச்சி கரும்பழுப்பு நிறமாக 10 மி.மீ. நீளமும் 5 மி.மீ. அகலமும் கொண்ட அளவில் இருக்கும். ஒரு தாய்ப்பூச்சி இலைகளுக்கு அடியில் 200 முட்டைகளுக்கு மேல் இடுகின்றன.

**எரிபூச்சியின் கட்டுப்பாடு முறைகள்:**

* இந்த எரிபூச்சி சில இடங்களில் சில சமயம் மட்டுமே தோன்றி சேதப்படுத்துவதால் விவசாயிகள் இவற்றை முதலில் கவனமாகக் கண்காணித்து வரவேண்டும்.
* தாய் அந்துப்பூச்சியின் நடமாட்டத்தை விளக்குப்பொறிகள் மூலம் கண்டறிய வேண்டும்.
* தாக்கப்பட்ட தென்னை ஓலைகளை சேகரித்து புழுக்கள், கூட்டுப்புழுக்களுடன் எரித்தோ அல்லது புதைத்தோ அழிக்க வேண்டும்.
* போதிய அளவு நீர் பாய்ச்சினால் (சொட்டு நீர் / தெளிப்பு நீர் / வாய்க்கால் பாசன நீர்) எரிபூச்சியின் தாக்குதலை ஓரளவு குறைக்க முடியும்.
* இயற்கையாகவே காணப்படும் குளவி வகை ஒட்டுண்ணிகள் எரிபூச்சிகளின் புழு மற்றும் கூட்டுப் புழுகளைத் தாக்கி உயிரியல் ரீதியாக கட்டுப் படுத்துகின்றன.
* சேதம் மிகுந்து காணப்பட்டால் டைகுளோர் வாஸ் மருந்தினை ஒரு லிட்டர் நீருக்கு 2 மிலி கலந்து

ராக்கர் அல்லது பெடல் பம்பு தெளிப்பான்கள் மூலம் ஓலைகள் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும்.

* மாற்று மருந்துகளாக மீதைல் டெமட்டான் 4 மிலி/லி அல்லது ட்ரைஅசோபாஸ் 5 மிலி/லி போன்றவற்றையும் தெளிக்கலாம்.

* உயரமான மரங்களுக்கு டிராக்டர் பொருத்தப்பட்ட மரத்தெளிப்பான் உபயோகித்து பூச்சிக்கொல்லிகளைத் தெளிக்கலாம்.

* எரிபூச்சியின் தாக்குதல் பற்றிய சேதத்தை சமாளிக்க விவசாயிகள் அனைவரும் ஒரே சமயத்தில் செயல்பட வேண்டும்.

* கருவிகள் பயன்படுத்த முடியாத இடங்களில் மிக உயர்ந்த மரங்களுக்கு 15 மிலி மோனோகுரோட்டோபாஸ் மருந்தை 15மிலி நீருடன் சேர்த்து வேர் மூலம் செலுத்தியும் இலை தின்னும் தென்னை எரிபூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.

எஸ்.மணிசேகரன்,ஜெ.ஜெயராஜ்,பூச்சியியல் துறை, வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை-625 104.

**இந்திய தேயிலைக்கு பாகிஸ்தானில் கிராக்கி**

மே 25,2011,02:16



மும்பை:இந்திய தேயிலைக்கு பாகிஸ்தானில், அதிக வரவேற்பு உள்ளது. இதனால், நடப்பாண்டில் இந்நாட்டிற்கான தேயிலை ஏற்றுமதி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐந்து அம்ச திட்டத்தின் கீழ், பாகிஸ்தான், ஈரான், ரஷ்யா உள்ளிட்ட 5 நாடுகளுக்கான தேயிலை ஏற்றுமதியை அதிகரிக்க, மத்திய அர" நடவடிக்கை எடுத்து வருகிறது. இதையொட்டி, அண்மையில் அபுதாபியில் நடைபெற்ற இந்திய தேயிலை விழாவில், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து, தேயிலை வர்த்தகர்கள் கலந்து கொண்டனர்.அப்போது, இந்திய தேயிலை

ஏற்றுமதிக்கு இடர்பாடான அம்சங்கள் குறித்தும், அவற்றுக்கான தீர்வுகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகளால், நடப்பாண்டில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய அண்டை நாடுகளுக்கான தேயிலை ஏற்றுமதி அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்த இரு நாடுகளுக்கும், கடந்த 2010-11ம் நிதியாண்டில், நம் நாட்டில் இருந்து 2 கோடி கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. உள்நாட்டில், கடந்த 2010ம் ஆண்டு தேயிலை உற்பத்தி, முந்தைய ஆண்டை விட 2.3ய்தவீதம் குறைந்து, 19.80 கோடி கிலோவிலிருந்து, 19.30 கோடி கிலோவாகய்ரிந்தது. எனினும், நடப்பு காலண்டர் ஆண்டில் தேயிலை ஏற்றுமதி, 2 கோடி கிலோவாக உயரும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. நடப்பு காலண்டர் ஆண்டில், சென்ற ஜனவரி முதல் மே மாதம் வரையிலான ஐந்து மாத காலத்தில், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளுக்கு, 1.22 கோடி கிலோ தேயிலை ஏற்றுமதியாகியுள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே காலத்தில், 74 லட்சம் கிலோ என்ற அளவில் குறைந்து காணப்பட்டது.பாகிஸ்தான் மக்கள், சிடிசி ரக தேயிலையை அதிகளவில் பயன்படுத்துகின்றனர். இந்நாட்டில் ஒருவர்,ய்ராசரியாக ஓராண்டிற்கு ஒரு கிலோ தேயிலையை பயன்படுத்துவதாக, ஆய்வில் தெரியவந்துள்ளது. தற்போது பாகிஸ்தானில் இந்திய தேயிலைக்கு வரவேற்பு அதிகரித்துள்ளதால், நடப்பாண்டில் ஏற்றுமதி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. அதேசமயம், ஈரான் நாட்டிற்கான இந்திய தேயிலை ஏற்றுமதி, நடப்பாண்டு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஈரான் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய்க்கான கரன்சி பரிமாற்றத்தில் சிக்கல் நீடிப்பதால், அந்நாட்டிற்கான தேயிலை ஏற்றுமதி குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.கடந்த 2010ம் ஆண்டு, இந்தியாவிலிருந்து ஈரான் நாட்டிற்கு 34 லட்சம் கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. இது, முந்தைய ஆண்டு, 1.10 கோடி கிலோவாக உயர்ந்திருந்தது. ஈரானுக்கான தேயிலை ஏற்றுமதி குறைந்து வருவதால், உள்நாட்டில் ஆர்த்தோடக்ஸ் ரக தேயிலை விலை, மேலும் குறைய வாய்ப்புள்ளதாக, இந்திய தேயிலை வாரிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**வைக்கோல் பெட்டி**

பதிவு செய்த நாள் : மே 25,2011,00:00 IST

வைக்கோல் பெட்டி என்ற எளிய குறைந்த செலவிலான எரிபொருள் சேமிப்பு சாதனத்தை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் மனையியல் விரிவாக்கத்?துறை (மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை) உருவாக்கியுள்ளது. இப்பெட்டியில், வெப்பம்

உள்ளிருந்து வெளியேறுவது தடுக்கப்பட்டு வெப்ப ஆற்றல் சேமிக்கப்பட்டு, உணவு பொருட்களைச் சமைப்பதற்கும், சூடு ஏற்றுவதற்கும் உதவுகிறது. வைக்கோல் பெட்டியில், உள்ளூரில் கிடைக்கக்கூடிய வைக்கோல் மற்றும் உமி போன்ற வேளாண் கழிவுகள் உபயோகப்படுத்தப்படுகிறது.

**வைக்கோல் பெட்டி வடிவமைத்தல்:**

கீழ்க்கண்ட அளவில் பெட்டி அமைக்கப்பட வேண்டும். நீளம்-45 செ.மீ., அகலம்-45 செ.மீ., உயரம் -45 செ.மீ. மரப்பெட்டி, கார்ட்போர்டு பெட்டி, மூங்கில் கூடை, சிமென்ட் தொட்டி போன்றவற்றை பயன்படுத்தலாம்.

**வடிவமைத்தல்**: கார்ட்போர்டு பெட்டியை தயாராக வைக்கவும். பெட்டியில் வைக்கோல் நிரப்பவும். பெட்டியின் அளவைப்போல் உள்ள சணல் பையில் வைக்கோல் நிரப்பவும்.

**சமைக்கும் முறை (உதாரணம் - அரிசி)**

* கழுவிய அரிசியை பாத்திரத்தில் எடுத்துக் கொள்ளவும்.
* இரண்டு மடங்கு தண்ணீர் ஊற்றவும்.
* 10 நிமிடம் அடுப்பில் வைத்து சூடு ஏற்றவும்.

வைக்கோல் பெட்டியின் நடுவில் பாத்திரம் வைக்கும் அளவிற்கு இடத்தை ஏற்படுத்தவும்.

* அடுப்பில் இருந்து பாத்திரத்தை எடுத்து வைக்கோல் பெட்டியில் வைக்கவும்.
* பெட்டியை வைக்கோல் நிரம்பிய சணல் பை கொண்டு மூடிவைக்கவும்.
* வைத்து 45 நிமிடத்திற்குள் அரிசி நன்கு சமைக்கப்பட்டும் (5-6 மணி நேரம் வரை சூடாக இருக்கும்).

**நன்மைகள்:**

* பாதுகாப்பானது, கையாளுவதற்கு எளிய முறை.
*குறைந்த செலவு
* சுலபமான பராமரிப்பு முறை
* சமைப்பதற்கு குறைவான நேரமே ஆகிறது.
* வெப்பநிலை பராமரிப்பு: தேவைப்படும் வெப்ப அளவை 6 மணி நேரத்திற்கு தக்கவைக்க முடியும். சமைக்கப்பட்ட அரிசியை 61 டிகிரி செல்சியஸ் வெப்பத்தில் 5 மணி நேரம் வரை வைக்கோல் பெட்டியில் வைக்கும்போது பராமரிக்கலாம். ஆனால் வெளியில் வைக்கும்பொழுது 35 டிகிரி செல்சியஸ் வெப்பத்தையே பராமரிக்க முடிகிறது.
* உயர்தர உணவு வகைகள்: இம்முறையில் தயாரிக்கப்படும் உணவு, மற்ற முறையில் சமைக்கப் படுவதைக் காட்டிலும் மணம், நிறம், பதம், சுவை ஆகியவற்றில் நல்ல தரம் வாய்ந்ததாக உள்ளது.

* குறைந்த அளவு ஊட்டச்சத்து இழப்பு: சமைக்க பயன்படுத்தும் நீர் முழுமையாக பயன்படுத்தப் படுவதால் குறைந்த அளவு ஊட்டச்சத்தையே இழக்கிறோம். மூலப்பொருட்களை சேமிக்க முடிகிறது.
* இம்முறையில் எரிபொருள், பணம், நேரம், ஆள் செலவு ஆகியவற்றை சேமித்து, சுகாதார கேடுகளையும் தடுக்க முடிகிறது. 58% சமைக்கும் நேரமும், 44% எரிபொருளுக்கான பணமும் சேமிக்கப்படுகிறது.
(தகவல்: ஆர்.ஜி.ரீஹானா, 268/77, ஓல்டு ஹவுசிங் யூனிட், எல்லீஸ் நகர், தாராபுரம்-638 657. ஆர்.ஜி.ரீஹானா அக்ரி கிளினிக், தாராபுரம்.

**கரும்பு வெட்ட ஆள் கிடைக்காததால் மரவள்ளிக்கு மாறிய விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : மே 25,2011,01:01 IST

சிறுபாக்கம் : சிறுபாக்கம் பகுதியில் கரும்பு பயிரிட்டு வந்த விவசாயிகள், கூலி ஆட்கள் கிடைக்காத காரணத்தினால் தற்போது மரவள்ளிக்கு மாறி வருகின்றனர். சிறுபாக்கம் மற்றும் வேப்பூர் பகுதி சுற்று வட்டார விவசாயிகள் தங்கள் நீர் பாசன நிலங்களில் தொடக்க காலத்தில் இருந்து பணப்பயிரான கரும்பை அதிக அளவில் பயிரிட்டு வந்தனர். நிச்சயமான விலை, குறைவனான தண்ணீர் இருந்த போதிலும் கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்து வந்தது. இந்நிலையில் கடந்த சில ஆண்டுகளாக கூலி ஆட்கள் தட்டுபாடு, அடிக்கடி ஏற்படும் மின் தடை, பதிவு செய்த குறிப்பிட்ட நாளில் கரும்பு வெட்ட முடியாத நிலை, வெட்டு கூலி பல மடங்கு உயர்வு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் கரும்பு பயிரிட்டிருந்த விவசாயிகள் சிக்கி தவித்து வந்தனர். பத்து மாதத்தில் அறுவடை செய்ய வேண்டிய கரும்பை பதினாறு மாதத்திற்கு மேல் காத்திருந்து அறுவடை செய்யும் நிலை ஏற்பட்டது. இதனால் இரண்டு ஆண்டிற்கு கிடைக்க வேண்டிய வருவாய் கிடைக்கபெறாமல் ஒரே வருவாயுடன் முடிந்து போகிறது. இதுபோல் பல்வேறு வகையில் சிக்கி தவித்த விவசாயிகள் கரும்பு பயிரிடுவதை விட்டு விட்டு பத்து மாத பயிரான மரவள்ளி கிழங்கு பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இப்பகுதியில் முன் எப்போதும் இல்லாத வகையில் விவசாயிகள் மூன்று மடங்கு அளவு மரவள்ளி கிழங்கை பயிரிட்டுள்ளனர்.

**உலக பால் தினத்தை முன்னிட்டு பால் பொருள் தயாரிப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : மே 25,2011,02:30 IST

நாமக்கல்: "உலக பால் தினத்தை முன்னிட்டு "மதிப்பூட்டிய பால் பொருட்கள் தயாரிப்பு' என்ற தலைப்பில், இலவச பயிற்சி முகாம், ஜூன் 1ம் தேதி நடக்கிறது' என, பால்வள அறிவியல் துறைத்தலைவர் இளங்கோ தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், பால்வள அறிவியல் துறையில், உலக பால் தினத்தை முன்னிட்டு, ஜூன் 1ம் தேதி "மதிப்பூட்டிய பால் பொருட்கள் தயாரிப்பு' என்ற தலைப்பில் ஒரு நாள் இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில், பாலில் அடங்கியுள்ள பல்வேறு சத்துப்பொருட்கள், சுகாதாரமான முறையில் பால் உற்பத்தி செய்தல், பாதுகாத்தல், ஐஸ் கிரீம், பால்கோவா, ரோஸ் மில்க், கேரட் மில்க், குலோப்ஜாமுன், ரசகுல்லா, பனீர் மற்றும் மசாலா மோர் தயாரித்தல், பேக்கிங் மற்றும் விற்பனைக்கான வழிமுறைகள் குறித்து பயிற்சி செயல் விளக்கத்துடன் அளிக்கப்படுகிறது. அதில், விவசாயிகள், பண்ணையாளர்கள், மகளிர், இளைஞர்கள், கல்லூரி மாணவ, மாணவியர் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்கலாம். விருப்பம் உள்ளவர்கள், நாமக்கல்-மோகனூர் சாலையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் பால்வள அறிவியல் துறைக்கு நேரில் வந்தோ அல்லது, 94434 33346, 94430 90944 என்ற மொபைல் ஃபோனிலோ தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து பயன்பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**வன விலங்குகள் கணக்கெடுப்பு பணி**

பதிவு செய்த நாள் : மே 25,2011,02:25 IST

ஈரோடு: ஈரோடு மண்டல வனப்பகுதியில் விலங்குகள் கணக்கெடுக்கும் பணி, தற்போது மும்முரமாக நடந்து வருகிறது. இம்மாதம் இறுதிக்குள் கணக்கெடுக்கும் பணியை விரைந்து முடிக்க வேண்டும் என்று மாவட்ட வன அலுவலர்களுக்கு, வனப்பாதுகாவலர் அருண் உத்தரவிட்டுள்ளார். வனப்பகுதியில் உள்ள விலங்குகளை கணக்கெடுக்கும் பணி சில மாதத்துக்கு முன் துவங்கியது. ஈரோடு மாவட்டத்தில், ஈரோடு டிவிஷனில் பர்கூர், காங்கயம், அந்தியூர், எஃப்.எஸ்., பெருந்துறை, சென்னம்பட்டியும், சத்தியமங்கலம் டிவிஷனில் பவானிசாகர், ஹாசனூர், தாளவாடி, டி.என்.பாளையம் ஆகிய காப்புக்காடுகளில் உள்ள வன விலங்குகள் கணக்கெடுக்கப்படுகிறது. ஈரோடு மண்டல வன பாதுகாவலர் அருண் கூறியதாவது: ஈரோடு மண்டல வனப்பகுதியில் யானை, சிறுத்தை, மான், நரி, புலி, கரடி உள்ளிட்ட பல வகையான விலங்குகள் உள்ளது. ஈரோடு மண்டலத்தில் 2010ன் கணக்கெடுப்பின் படி, 28 புலிகள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. புலி கணக்கெடுப்பை அடுத்து, மற்ற விலங்குகளின் கணக்கெடுப்பு நடந்து வருகிறது. கணக்கெடுப்பை மே 31ம் தேதிக்குள் முடித்திட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**விலையில் "இனிக்கும்' மாம்பழம்**

பதிவு செய்த நாள் : மே 25,2011,04:29 IST

மதுரை:மதுரையில் மாம்பழ சீசன் களைகட்டுவதால், விலை சீராகஇருக்கிறது. பழவியாபாரி செந்தில் கூறியதாவது : முதல் தரமான இமாம்பசந்த் மாம்பழம் ஒரு கிலோ ரூ.70, சப்பட்டை ரூ.30-40, காலாபாடி ரூ.40, பாலாமணி ரூ.35, அல்போன்சா ரூ.40, மல்கோவா ரூ.50, வாஷிங்டன் ஆப்பிள் ரூ.130, ராயல்கலா ஆப்பிள் ரூ.150, கிரானி ஆப்பிள் ரூ.150, சீனா ஆப்பிள் ரூ.110, பேரிக்காய் ரூ.80, நாவற்பழம் ரூ.100, பிளம்ஸ் ரூ.70, கிர்னிப்பழம் ரூ.30,சப்போட்டா ரூ.20, அன்னாசி ரூ.30, பப்பாளி ரூ.15க்கு விற்கப்படுகிறது, என்றார்.

**முருங்கை விலை அதிகரிப்பு விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மே 24,2011,21:35 IST

ஒட்டன்சத்திரம் : ஒட்டன்சத்திரத்தில் முருங்கைக்காய் விலை ஒரே நாளில் கிலோவிற்கு ஏழு ரூபாய் வரை உயர்ந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்கள், மூலனூர், தாராபுரம் உள்ளிட்ட பகுதிகளில் முருங் கை அதிகமாக பயிரிடப்பட்டுள்ளது. இப்பகுதியில் மரமுருங்கையை விட செடி முருங்கையே அதிகமாக விளைவிக்கப்படுகிறது. கடந்த சில நாட்களாக அவ்வப்போது பலத்த காற்றுடன் பெய்து வரும் கோடை மழை காரணமாக முருங்கை விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால் மார்க்கெட்டிற்கு வரத்து குறைந்துள்ளது. இருந்த போதிலும் விலை அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஒரு கிலோ முருங்கைக்காய் 13 ரூபாய்க்கு விற்றது. வியாபாரிகள் போட்டி போட்டு வாங்கியதால் கிலோவிற்கு ஏழு ரூபாய் அதிகரித்தது. செடி முருங்கை அதிகபட்சமாக கிலோ 20 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## கேரளாவில் விவசாயத்திற்கு எண்டோசல்பான் இல்லாத புதிய பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்கப்படும் வேளாண்மை மந்திரி மோகனன் தகவல்

கோழிக்கோடு,மே.25–

கேரளாவில் விவசாயத்திற்கு எண்டோசல்பான் இல்லாத புதிய பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்கப்படும் என்று வேளாண்மை மந்திரி மோகனன் கூறினார்.

எண்டோசல்பானால் பாதிப்பு

கேரளா மாநிலம் காசர்கோடு மாவட்டத்தில் எண்டோசல்பான் பூச்சிக்கொல்லி மருந்தால் விவசாயிகள், பொதுமக்கள் உள்பட 16 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர். மேலும் பிறக்கும் குழந்தைகள் ஊனமுற்ற குழந்தைகளாக பிறந்தன. இதில் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற குழந்தையையும் கடந்த மாதம் இறந்தது.

இதை தடை செய்ய கோரி முன்னாள் முதல்–மந்திரி அச்சுதானந்தன் உண்ணாவிரத போராட்டம் நடத்தினர். மேலும் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள், சாலை மறியல் போராட்டங்கள் நடந்தன. ஜெனிவாவில் நடந்த எண்டோசல்பான் குறித்த கருத்தரங்கில், எண்டோசல்பான் ஒரு கொடிய விஷம் என்றும், அதனை தடை செய்ய வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றினர்.

புதிய பூச்சிக்கொல்லி மருந்து

இந்த நிலையில் கேரளாவில் சட்டசபை தேர்தல் முடிவடைந்து பெரும்பான்மை இடங்களை பெற்ற காங்கிரஸ் கூட்டணி ஆட்சி அமைத்து உள்ளது. வேளாண்மை மந்திரியாக நேற்று முன்தினம் கே.பி.மோகனன் பதவி ஏற்றுக்கொண்டார். பின்னர் சொந்த ஊரான கோழிக்கோடு மாவட்டம் வடகராவுக்கு நேற்று வந்தார். அங்கு நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

கேரளாவில் எண்டோசல்பான் பூச்சிக்கொல்லி மருந்து விற்கப்படுவது தடை செய்யப்பட்டு உள்ளது, மேலும் கடைகளில் உள்ள மருந்துகளையும் பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுத்து உள்ளோம். தமிழ்நாட்டில் இருந்து கேரளாவிற்கு எண்டோசல்பான் மருந்து வருவதால் சோதனை சாவடிகளில் சோதனை செய்வதை தீவிரபடுத்தப்பட்டு உள்ளது.

விவசாயிகளும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். விவசாயத்திற்கு பயன்படுத்தும்

வகையில் புதிய பூச்சிக்கொல்லி மருந்தை தயாரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.
இவ்வாறு அவர் கூறினார்.

## இலக்கை விஞ்சி சாதனை கயிறு பொருள்கள் ஏற்றுமதி ரூ.807 கோடியாக உயர்வு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
சென்ற 2010–11–ஆம் நிதி ஆண்டில், நாட்டின் கயிறு பொருள்கள் ஏற்றுமதி தொடர்ந்து இரண்டாவது முறையாக இலக்கையும் (ரூ.800 கோடி) விஞ்சி ரூ.807 கோடியாக உயர்ந்துள்ளது. அந்த நிதி ஆண்டில், சீனாவிற்கான ஏற்றுமதி வியத்தகு அளவில் அதிகரித்துள்ளது. அதேசமயம், இந்தியாவிலிருந்து அதிக அளவில் கயிறு பொருள்களை இறக்குமதி செய்யும் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி குறைந்துள்ளது.
சென்ற நிதி அண்டில், அளவின் அடிப்படையில் அமெரிக்காவுக்கு கயிறு ஏற்றுமதி குறைந்துள்ள நிலையில், இந்தியாவிலிருந்து அதிக அளவில் கயிறு பொருள்களை இறக்குமதி செய்வதில் அமெரிக்கா தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறது. அந்த நிதி ஆண்டில், அமெரிக்காவின் பங்களிப்பு 20–22 சதவீதமாக உள்ளது.
கடந்த 2009–10–ஆம் நிதி ஆண்டில், அமெரிக்காவின் பங்களிப்பு 30–35 சதவீதமாக இருந்தது. அந்த நிதி ஆண்டில், கயிறு பொருள்கள் ஏற்றுமதி ரூ.804 கோடியாக இருந்தது. இது, அந்த நிதி ஆண்டிற்கான இலக்கைக் காட்டிலும் ரூ.104 கோடி அதிகமாகும்.
தேங்காய் அதிக அளவில் உற்பத்தியாகும் கேரளா, தமிழ்நாடு மற்றும் ஆந்திரபிரதேசம்

ஆகிய மாநிலங்களில் கயிறு பொருள்கள் முக்கிய குடிசைத் தொழிலாக உள்ளது. இது, அம்மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு ஓர் உந்துசக்தியாக திகழ்கிறது. இந்தியாவிலிருந்து 100–க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கயிறு பொருள்கள் ஏற்றுமதியாகின்றன. சர்வதேச அளவில் கயிறு பொருள்கள் உற்பத்தியில் இந்தியாவும், இலங்கையும் முன்னிலை வகிக்கின்றன. சர்வதேச உற்பத்தியில் (3.50 லட்சம் டன்) இந்த இரு நாடுகளின் பங்களிப்பு 90 சதவீதமாக உள்ளது.

## விலை 100% உயர்ந்துள்ள நிலையிலும் இளநீர் விற்பனை அதிகரித்து வருகிறது



பி கே கிருஷ்ணகுமார்

கொச்சி

சென்ற ஓர் ஆண்டு காலத்தில் இளநீர் விலை 100 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்நிலையிலும், விற்பனை வியக்கத்தக்க வகையில் அதிகரித்து வருகிறது. அதிக விலை கிடைப்பதால் தேங்காயை காட்டிலும் இளநீர் விற்பனையில் உற்பத்தியாளர்கள் கவனம் செலுத்துகின்றனர்.

உடல் ஆரோக்கியம்

சாலையோரங்களில் விற்பனை செய்யப்பட்டு வரும் இளநீர், பாக்கெட்டுகளிலும், பாட்டில்களிலும் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இத்துறையில் கார்ப்பரேட் அமைப்புகளும் களமிறங்கி உள்ளன. இளநீர் பருகுவது உடலுக்கு ஆரோக்கியமானது. பல்வேறு மருத்துவ குணங்கள் உள்ளதால், மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுகிறது. மக்களிடம் வாங்கும் சக்தியும் அதிகமாக உள்ளது. இதனையடுத்து, விற்பனையில் விறுவிறுப்பு ஏற்பட்டு வருகிறது.

இது குறித்து ஜெயின் அக்டோ புட் புராடக்ட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் அஜய் குமார் ஜாய் கூறும்போது, “ நிறுவனம் பெங்களூரில் உள்ள பெரிய மருத்துவமனைகளுக்கு பாட்டிலில் அடைக்கப்பட்ட இளநீரை விற்பனை செய்து

வருகிறது. ஒரு பாட்டில் இளநீர் விலை ரூ.2 உயர்த்தப்பட்டுள்ளது. இந்நிலையிலும், இவ்வாண்டில் விற்பனை 50 சதவீதம் அதிகரிக்கும்” என்று தெரிவித்தார்.

டாக்டர்களின் பரிந்துரையின்படி ஏராளமானவர்கள் இளநீர் பருகி வருகின்றனர். இது குறித்து தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் மும்பையைச் சேர்ந்த மாதுரி என்பவர் கூறும்போது, “கடந்த 2008–ஆம் ஆண்டில் இளநீர் விலை ரூ.12–ஆக இருந்தது. தற்போது விலை ரூ.20–ஐ தாண்டியுள்ளது. இந்நிலையிலும் மருத்துவரின் பரிந்துரையின் பேரில் சிலர் இளநீரை தினசரி பருகி வருகின்றனர்” என்று தெரிவித்தார்.

பங்களிப்பு

சென்ற ஆண்டில் மொத்த உற்பத்தியில் இளநீரின் பங்களிப்பு 15 சதவீதமாக இருந்தது. இது, இவ்வாண்டில் 20 சதவீதமாக அதிகரிக்கும் என்று தேங்காய் மேம்பாட்டு வாரியத்தின் தலைமை மேம்பாட்டு அதிகாரி தாமஸ் மாத்யூ தெரிவித்தார்.

புதுடெல்லியில் ஒரு இளநீரின் விலை ரூ.30–40–ஆக உள்ளது. கேரளாவில் ரூ.20–25–ஆக உள்ளது. தேவைப்பாட்டை ஈடுகட்டும் வகையில் உற்பத்தி இல்லாததாலும், சாலையோரங்களில் விற்பனை செய்பவர்களுக்கு பல்வேறு செலவினங்கள் ஏற்படுவதாலும் இளநீர் விலை அதிகமாக உள்ளது.

தேங்காய் உற்பத்தியில் தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய மாநிலங்கள் முன்னிலை வகிக்கின்றன.

## கரீஃப் பருவத்தில் உரம் தேவைப்பாடு 4% அதிகரிக்கும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

வரும் ஜூன் மாதம் தொடங்கும் கரீஃப் பருவத்தில், உரங்களுக்கான தேவைப்பாடு சென்ற ஆண்டின் இதே பருவத்தைக் காட்டிலும் 4 சதவீதம் அதிகரித்து 2.77 கோடி டன்னிலிருந்து 2.88 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பொதுத் துறையைச் சேர்ந்த எம்.எம்.டி.சி. நிறுவனம், இரண்டு வகையான டீ.ஏ.பி. உரங்களை இறக்குமதி செய்வதற்காக நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகளை கோரி உள்ளது. இந்த ஒப்பந்தப் புள்ளிகள் இந்த மாதம் 30–ந் தேதி வரை பெறப்படும். அன்றைய தினமே யாருக்கு டெண்டர் வழங்கப்படும் என்பது குறித்து முடிவு எடுக்கப்படும்.

## ஊட்டி மார்க்கெட்டில் விற்பனைக்கு குவியும் பிளம்ஸ், வால்பேரிக்காய்



ஊட்டி மார்க்கெட்டில் ஒரு கடையில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பிளம்ஸ், வால்பேரிக்காய் ஆகியவற்றை படத்தில் காணலாம்.

ஊட்டி, மே.25–

ஊட்டி மார்க்கெட்டில் பிளம்ஸ், வால்பேரிக்காய் போன்றவை விற்பனைக்கு குவிந்துள்ளன.

சீசன்

நீலகிரி மாவட்டத்தில் வால்பேரிக்காய், பீச்சீஸ், பிளம்ஸ் உள்பட பல்வேறு பழ வகைகளும், பீட்ரூட், கேரட், உருளைக்கிழங்கு உள்பட மலைத்தோட்ட காய்கறிகளும் உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்காக பல ஏக்கர் கணக்கிலான நிலப்பரப்பிவில் விவசாயிகள் பயிரிட்டு வருகிறார்கள்.

மாவட்டத்தில் ஒவ்வொரு காலக்கட்டத்தில் ஒவ்வொரு பழங்களின் சீசன் காலம் ஆகும். இதில் தற்போது கோடை காலம் என்பதால் பிளம்ஸ் மற்றும் வால்பேரிக் காய்

பழங்களின் சீசன் தொடங்கி உள்ளது. இதனால் ஊட்டி மார்க்கெட்டுக்கு அதிகளவில் பிளம்ஸ், வால்பேரிக்காய் போன்றவை விற்பனை வரத்தொடங்கி உள்ளன.

விளைச்சல் குறைவு

ஒரு கிலோ வால்பேரிக்காய் மற்றும் பிளம்ஸ் பழங்கள் ரூ.60க்கு விற்பனை செய்யப் படுகிறது. ஊட்டி பகுதியில் விளைந்தாலும், இவற்றின் விலை அதிகமாகவே உள்ளது. இதற்கு காரணம் வியாபாரிகள் விளைச்சல் குறைவு என்று கூறுகிறார்கள்.

இது குறித்து என்.எஸ்.எச். ஷேக் என்ற வியாபாரி கூறியதாவது:–

ஊட்டியில் தற்போது பிளம்ஸ் மற்றும் வால்பேரிக்காய் பழங்களின் சீசன் காலம் ஆகும். இந்த 2 பழங்களும் ஒரு கிலோ ரூ.60க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதற்கு காரணமாக தற்போது உற்பத்தி குறைவாக உள்ளது. இதற்கு காரணமாக இந்த வகை பழ மரங்களை யாரும் புதியதாக நடவு செய்வது இல்லை.

வெட்டுகிறார்கள்

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் நடவு செய்யப்பட்ட பழமை வாய்ந்த மரங்கள் இன்னும் விளைச்சலை தந்து கொண்டுள்ளன. ஒரு சில விவசாயிகள் மட்டும் சில ஆண்டுகளுக்கு முன்பு நடவு செய்தனர். தற்போது யாரும் புதியதாக மரங்கள் நடவு செய்யவில்லை. மேலும் பழமைவாய்ந்த மரங்கள் அழிந்து வருகின்றன. ஒரு சிலர் மரங்களை வெட்டி விடுகிறார்கள். இதன் காரண மாக உற்பத்தி குறைந்துள்ளது. எனவே புதியதாக மரங்களை வளர்க்க தோட்டக்கலை துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

### சர்க்கரை
வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,730–2,760

### மணிலா பயறு
80 கிலோ கொண்ட மூட்டை 4,050–4,100

### கடலை எண்ணெய்
ஒரு குவிண்டால் (வரி உள்பட) 8,700–00

### கடலை புண்ணாக்கு
70 கிலோ மூட்டை (சாக்கு வரி உள்பட) 1,450–00

### தேங்காய் எண்ணெய்
15 கிலோ கிராம் கொண்ட டின் (வரி உள்பட) 1,917–00

### நல்லெண்ணெய்
குமாருரு, திருமால், பின்னையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1 குவிண்டால் (வரி உள்பட) 10,000–00
டின் (15 கிலோ) 1,700–00

### விளக்கெண்ணெய்
ஒரு குவிண்டால் (வரி உள்பட) 11,000,00
15 கிலோ டின் (வரி உள்பட) 1,850–00

### சூரியகாந்தி எண்ணெய்
சுத்திகரிக்கப்பட்டது 15 கிலோ டின் (வரி உள்பட) 1,155,00

### ரீபைண்டு ஆயில்
(சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்)
15 கிலோ டின் (வரி உள்பட) 1,480,00

### வனஸ்பதி
டின் ஒன்றுக்கு (வரி உள்பட) 1,115,00

### பாமாயில்
10 கிலோ டின் (வரி தனி) 585–00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,மே.24–

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100 கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 12,000 | 150,00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64,00 |
| புளி (40கி) | ரூ. 8,950 | 108,00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110,00 |
| துவரம்பருப்பு | ரூ. 6,500 | 67,00 |
| கடலைப்பருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41,00 |
| உளுத்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73,00 |
| உளுத்தம்பருப்பு (வெள்ளை) | ரூ. 7,100 | 73,00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38,00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 5000 | 52,00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34,00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48,00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66,00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62,00 |
| கொள்ளு | ரூ. 2,000 | 22,00 |
| கடலைப்பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35,00 |
| சர்க்கரை | ரூ. 2,800 | 30,00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,மே.24–

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:–

| | | |
|---|---|---|
| 1. | வி.797 22எம்.எம் | ரூ. 7,422 |
| 2. | ஜெயதார் (கர்நாடகா) | ரூ. 12,591 |
| 3. | ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) | ரூ. 12,524 |
| 4. | எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் | ரூ. 11,529 |
| 5. | சங்கர் 6 28 எம்.எம். புதியது | ரூ. 12,935 |
| 6. | எம்.சி.யு. 5 32 எம்.எம். | ரூ. 12,935 |
| 7. | டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு | ரூ. 19,684 |

## கோவை உழவர் சந்தை

கோவை,மே.24–

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 105–95 | காலிப்பிளவர் | ரூ. | 20–22 |
| கத்தரிக்காய் | ரூ. | 14–12 | பொறியல் தட்டை | ரூ. | 18–16 |
| வெண்டைக்காய் | ரூ. | 12–16 | பச்சை மொச்சை | ரூ. | 30–00 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 8–00 | தேங்காய் | ரூ. | 12–15 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 12–10 | பட்டாணி | ரூ. | 60–70 |
| புடலை | ரூ. | 12–16 | பூண்டு | ரூ. | 90–100 |
| பீர்க்கான்காய் | ரூ. | 24–26 | கறிவேப்பிலை | ரூ. | 12–14 |
| கரைக்காய் | ரூ. | 10–12 | அகத்தி | ரூ. | 16–00 |
| பாகற்காய் | ரூ. | 18–20 | வாழைக்காய் | ரூ. | 18–00 |
| கொத்தவரை | ரூ. | 12–14 | குடைமிளகாய் | ரூ. | 34–00 |
| பூசணிக்காய் | ரூ. | 10–00 | சாதா பீன்ஸ் | ரூ. | 24–00 |
| அரசாணிக்காய் | ரூ. | 7–8 | டபுள்பீன்ஸ் | ரூ. | 34–00 |
| மேராக்காய் | ரூ. | 24–00 | கறிபீன்ஸ் | ரூ. | 24–26 |
| பச்சை மிளகாய் | ரூ. | 12–13 | புஸ்பீன்ஸ் | ரூ. | 34–32 |
| குண்டு மிளகாய் | ரூ. | 18–00 | காளான் | ரூ. | 80–140 |
| சின்னவெங்காயம் | ரூ. | 22–20 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11–13 |
| பெரியவெங்காயம் | ரூ. | 10–00 | மாங்காய் | ரூ. | 10–13 |
| இஞ்சி | ரூ. | 32–00 | திராட்சை | ரூ. | 32–00 |
| முருங்கைக்காய் | ரூ. | 29–26 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 11–16 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 6–17 | கொய்யா1கிலோ | ரூ. | 24–00 |
| சேனைகிழங்கு | ரூ. | 24–00 | மாதுளை1கிலோ | ரூ. | 105–95 |
| கருணைகிழங்கு | ரூ. | 28–00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 13–14 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22–00 | வரமிளகாய் | ரூ. | 80–00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 | மாம்பழம் | ரூ. | 70–50 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 14–00 | ஆப்பிள் | ரூ. | 115–130 |
| சிறுகிழங்கு | ரூ. | 30–00 | சாத்துக்குடி | ரூ. | 45–00 |
| முள்ளங்கி | ரூ. | 10–12 | நெல்லிக்காய் | ரூ. | 40–00 |
| கேரட் (கட்டி) | ரூ. | 18–20 | ஆரஞ்சு | ரூ. | 75–00 |
| பீட்ரூட் (கட்டி) | ரூ. | 12–10 | வெள்ளரி | ரூ. | 13–26 |
| நூல்கோல் | ரூ. | 20–00 | புளி 1 கிலோ | ரூ. | 75–00 |
| கொத்தமல்லி | ரூ. | 26–28 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 34–00 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 20–00 | அவரை | ரூ. | 28–20 |
| முட்டைகோஸ் | ரூ. | 8–10 | நிலக்கடலை | ரூ. | 35–00 |
| கலர்கோஸ் | ரூ. | 12–00 | மக்காச்சோளம் | ரூ. | 3–20 |
| புதினா | ரூ. | 15–16 | | | |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:–

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.26300 |
| மிளகு (சேட்டன்) | ரூ.27100 |
| மிளகு (வயநாடன்) | ரூ.28100 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 16,000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 10500 |
| சுக்கு(புதியது) | ரூ.15000 |
| சுக்கு(பழையது) | ரூ.16100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1200 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1000 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.10350 |
| கொப்பரை நாடன் | ரூ.6550 |
| கொப்பரை ராசு | ரூ.6750 |
| கொப்பரை தில்பசன் | ரூ.7000 |
| கொப்பரை ராஜீப்பூ | ரூ.7100 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7200 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 21000 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 27000 |
| ரப்பர் பால் | ரூ. 18600 |
| காப்பி | ரூ. 10800 |
| உருண்டை காப்பி (52 கிலோ) | ரூ. 5900 |
| நேந்திரகாய் | ரூ. 1400 |
| இஞ்சி | ரூ. 1000 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,மே.24–

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,520 | 98.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1130 | 70.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1180 | 76.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1030 | ——— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1120 | 71.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 95.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1720 | 120.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,850 | 125.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,060 | 60.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,420 | 90.00 |
| வனஸ்பதி | | |
| வில்வி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,225 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1010 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,030 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,030 | – |

### பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.190.00 | அதிகபட்சவிலை | ரூ.284.00 |
| சராசரி விலை | ரூ.140.83 | சராசரி விலை | ரூ.230.39 |
| குறைந்தபட்சவிலை | ரூ.116.00 | குறைந்தபட்சவிலை | ரூ.218.00 |

**பட்டு நூல் ரூ.1,570**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 16,800,00 | 16,800,00 | 16840,00 |
| ஒரு கிராம் | 2,100,00 | 2,100,00 | 2105,00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 53,455,00 | 57,200,00 | 58,000,00 |
| ஒரு கிராம் | 57,20 | 57,20 | 58,00 |

தினகரன்

# மஞ்சள் விலை பாதியாக சரிந்தது

பதிவு செய்த நாள் 5/25/2011 12:52:00 AM



ஈரோடு : ஈரோட்டில் தொடர்ந்து மஞ்சள் விலை சரிவடைந்து வருகிறது. தற்போது குவிண்டால் ரூ.8200/&க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் கடந்த ஆண்டு அதிகபட்சமாக ஒரு குவிண்டால் மஞ்சள் ரூ.17,500க்கு விற்பனை செய்யப்பட்டது. விலை உயர்வால் கடந்த ஆண்டு மஞ்சள் சாகுபடி இருமடங்கு அதிகரித்தது. இதனால் உற்பத்தி அதிகரித்து, விலை வீழ்ச்சியடைந்து வருகிறது.

நேற்று முன்தினம் ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் 979 மூட்டைகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு, அதில் 814 மூட்டைகள் விற்பனையானது. ஒரு குவிண்டால் விரலி மஞ்சள் அதிகபட்சம் ரூ.8210&க்கும், குறைந்தபட்சம் ரூ.7566&க்கும், கிழங்கு ரூ.7367&க்கும், குறைந்தபட்சம் ரூ.6867 &க்கும் விற்பனை ஆனது. வெளி மார்க்கெட்டில் விரலி அதிகபட்சம் ரூ.8209, குறைந்தபட்சம் ரூ.6414, கிழங்கு அதிகபட்சம் ரூ.7084, குறைந்தபட்சம் ரூ.6294 ஆக இருந்தது.

இரு வாரங்களுக்கு முன்பு வரை குவிண்டால் மஞ்சள் ரூ.9 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரை இருந்தது. இரு வாரங்களாக தொடர்ந்து மஞ்சள் விலை வீழ்ச்சியடைந்து தற்போது அதிகபட்சமாகவே ரூ.8200க்கு தான் விற்பனை ஆகிறது. மஞ்சல் விலை சரிவு காரணமாக, விவசாயிகள் அதை விற்க மனமின்றி பண்ணை வீடுகளிலும், குடோன்களிலும் இருப்பு வைத்து வருகின்றனர்.